தென்காசி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை: திரு.ஏ.கே.கமல் கிஷோர், இ.ஆ.ப.,

செ.மு.ந.க.எண். 34/அ3/2022, நாள்: 14.03.2024

பொருள்: சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறை தென்காசி மாவட்டம் - பணியிடங்களில் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013 — புகார் மனுக்களை பெறுவதற்கு தாலுகா, கோட்டம் நகராட்சி மற்றும் பேருராட்சி அளவில் மைய முனை அலுவலர்கள் (Nodal Officers) நியமித்து ஆணை வழங்குதல் - தொடர்பாக

பார்வை:
1. பணியிடத்து பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013.
2. சமூக நல ஆணையர், சென்னை அவர்களின் நே.மு.ந.க.எண்.024610/ SHEW/2023, நாள்: 10.01.2024
3. மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி அவர்களின் செ.மு.ந.க.எண் 34/அ3/2022 நாள் : 12.02.2024
4. சமூக நல ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.003325/SHEW/2024, நாள் 07.03.2024.

------

ஆணை:-

பார்வை 1ல் காணும் சட்டத்தின் படியும் மற்றும் பார்வை-2ல் காணும் நேர்முக கடிதத்தில் தெரிவித்துள்ள படி, தென்காசி மாவட்டத்தில் 10 நபர்களுக்கு கீழ் பணிபுரியும் அனைத்து பணியிடங்களிலும் பாலியல் வன்கொடுமையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் பொருட்டு, மாவட்ட அளவில் உள்ளூர் புகார் குழு அமைக்கப்பட்டுள்ளது. பார்வை-3ல் காணும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி தென்காசி மாவட்டத்தில் உள்ள 10 ஊராட்சி ஒன்றியங்களில் விரிவாக்க அலுவலர் (சமூக நலன்) அவர்களை பொறுப்பு அலுவலர்களாக நியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் தாலுகா அளவில் வட்டாட்சியர்களையும், கோட்ட அளவில் கோட்டாட்சியர்களையும், நகராட்சி அளவில் நகராட்சி ஆணையர்களையும் மற்றும் பேருராட்சி அளவில் செயல் அலுவலர்களையும் புகார் மனுக்களை பெறுவதற்கு மைய முனை அலுவலர்களாக (Nodal Officers) கீழ்கண்டவாறு நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பொறுப்பு பகுதி | பொறுப்பு அலுவலர் |
|---|---|---|
| 1. | தென்காசி கோட்டம் | வருவாய் கோட்டாட்சியர், தென்காசி |
| 2. | சங்கரன்கோவில் கோட்டம் | வருவாய் கோட்டாட்சியர், சங்கரன்கோவில் |
| 3. | தென்காசி வட்டம் | வட்டாட்சியர், தென்காசி |

Scanned by Scanner Go

| வ.எண் | பொறுப்பு பகுதி | பொறுப்பு அலுவலர் |
|---|---|---|
| 4. | செங்கோட்டை வட்டம் | வட்டாட்சியர், செங்கோட்டை |
| 5. | கடையநல்லூர் வட்டம் | வட்டாட்சியர், கடையநல்லூர் |
| 6. | ஆலங்குளம் வட்டம் | வட்டாட்சியர், ஆலங்குளம் |
| 7. | வீ.கே.புதூர் வட்டம் | வட்டாட்சியர், வீ.கே.புதூர் |
| 8. | சங்கரன்கோவில் வட்டம் | வட்டாட்சியர், சங்கரன்கோவில் |
| 9. | திருவேங்கடம் வட்டம் | வட்டாட்சியர், திருவேங்கடம் |
| 10. | சிவகிரி வட்டம் | வட்டாட்சியர், சிவகிரி |
| 11. | தென்காசி நகராட்சி | நகராட்சி ஆணையர், தென்காசி |
| 12. | கடையநல்லூர் நகராட்சி | நகராட்சி ஆணையர், கடையநல்லூர் |
| 13. | செங்கோட்டை நகராட்சி | நகராட்சி ஆணையர், செங்கோட்டை |
| 14. | புளியங்குடி நகராட்சி | நகராட்சி ஆணையர், புளியங்குடி |
| 15. | சுரண்டை நகராட்சி | நகராட்சி ஆணையர், சுரண்டை |
| 16. | சங்கரன்கோவில் நகராட்சி | நகராட்சி ஆணையர், சங்கரன்கோவில் |
| 17. | ஆலங்குளம் பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 18. | ஆழ்வாற்குறிச்சி பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 19. | அச்சன்புதூர் பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 20. | ஆய்குடி பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 21. | குற்றாலம் பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 22. | இலஞ்சி பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 23. | கீழப்பாவூர் பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 24. | மேலகரம் பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 25. | பண்பொழி பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 26. | புதூர் பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 27. | இராயகிரி பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 28. | சாம்பவார் வடகரை பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 29. | சிவகிரி பேரூராட்சி | செயல் அலுவலர் |

Scanned by Scanner Go

| வ.எண் | பொறுப்பு பகுதி | பொறுப்பு அலுவலர் |
|---|---|---|
| 30. | சுந்தரபாண்டியாபுரம் பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 31. | திருவேங்கடம் பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 32. | வடகரை கீழபிடாகை பேரூராட்சி | செயல் அலுவலர் |
| 33. | வாசுதேவநல்லூர் பேரூராட்சி | செயல் அலுவலர் |

மேற்காணும் பொறுப்பு அலுவலர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட அரசு அலுவலகங்கள், கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக வளாகங்கள் அனைத்திலும் அந்தந்த அலுவலக மற்றும் நிறுவன தலைமையின் கீழ் உள்ளக புகார் குழு (ICC – Internal Complaint Committee) அமைத்துள்ள பணிகளை கண்காணிக்கவும், உள்ளக புகார் குழு அமைக்கப்பட்ட விவரங்கள் மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டதை உறுதி செய்யவும் பணிக்கப்படுகிறார்கள். மேலும் மேற்படி குழு அமைக்கப்படாத அலுவலகங்கள், சிறு நிறுவனங்கள் மற்றும் பணியிட தலைவர் மீது பெறப்படும் புகார்களை மாவட்ட அளவிலான உள்ளூர் புகார் குழுவிற்கு (LCC – Local Complaint Committee) பரிந்துரைக்கவும் பொறுப்பு அலுவலர்களாக நியமனம் செய்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

15/3/24.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
தென்காசி

14/3/24

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்

நகல்
சமூக நல ஆணையர்,
சமூக நல ஆணையரகம்,
லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம்,
காமராஜர் சாலை
சென்னை 600005.

Scanned by Scanner Go